### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்ததற்கிணங்க

# நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்குழு அறிக்கை - கால அவகாசம் நீட்டிப்பு!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து “கள ஆய்வு” செய்வதற்காக 38 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழுவானது, மாவட்டத்திற்குட்பட்ட தொகுதி வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு அனைத்துமட்ட கழக நிர்வாகிகளை நேரடியாக சந்தித்து கருத்துகளையும் அவர்களின் பரிந்துரைகளையும் பெற்று கள ஆய்வு அறிக்கையை ஜுன் 5ஆம் தேதிக்குள் கழகத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்திருந்தோம்.

தற்போது ஆய்வுக்குழுவினர் கழகத் தலைவர் அவர்களிடம் காலஅவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று கோரியதின் அடிப்படையில் வரும் ஜுன் 10ந் தேதி கள ஆய்வு அறிக்கையினை சமர்ப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை-18.
நாள் : 28.05.2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# ரூ.2 லட்சம் கோடியில் நிலவில் நிரந்தர ஆய்வு மையம்!

## நாசா 3 கட்ட திட்டம் வெளியீடு!

வாஷிங்டன், மே 29-

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா தற்போது நிலவில் மனிதர்கள் நிரந்தரமாக தங்கி ஆய்வு செய்வதற்கான பிரமாண்டமான ஆர்ட்டெமிஸ் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இதற்கான ஆரம்பகட்ட பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், ஆர்ட்டெமிஸ் திட்டத்திற்காக நிலவில் நிரந்தர ஆய்வு மையம் அமைக்க நாசா முடிவு செய்துள்ளது. இதனை 3 கட்டங்களாக நிறைவு செய்வதற்கான புதிய திட்டத்தை நாசா நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

ரூ.2 லட்சம் கோடியில் நிலவில் நிரந்தர ஆய்வு மையம் 3 கட்டமாக அமைத்து முடிக்கப்படும் என நாசா நிர்வாகி ஜாரெட் ஐசக்மேன் தெரிவித்துள்ளார்.

நிலவின் அபாயகரமான சூழலில் வாழ்வதற்கும் செயல்படுவதற்கும் தேவையான திறன்களை கற்றுக்கொள்ள உதவும் சோதனைகளை மேற்கொள்வதற்காக நிலவு ரோவர்கள், டிரோன்களுடன் கூடிய வகையில் இந்த நிரந்தர ஆய்வு மையம் அமைக்கப்படும் என ஐசக்மேன் தெரிவித்துள்ளார்.

2028ம் ஆண்டில் நிலவில் விண்வெளி வீரர்களை தரையிறக்குவதை நாசா நோக்கமாக கொண்டுள்ளது. அதற்கு முன்பாக தேவையான உபகரணங்களுடன் கூடிய இந்த நிரந்தர ஆய்வு மையம் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு செஞ்சிக் கோட்டை

# சாதுல்லாக்கான் மசூதியில் முஸ்லீம்கள் சிறப்பு தொழுகை!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டார்!

செஞ்சி, மே 29-

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு செஞ்சிக் கோட்டை சாதுல்லாக்கான் மசூதியில் முஸ்லீம்கள் சிறப்பு தொழுகை ஈத்கா மைதானத்தில் நடைபெற்ற

சிறப்பு தொழுகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டார்.

இஸ்லாமியர்களின் பண்டிகைகளில் ஒன்றான பக்ரீத் பண்டிகை ஆண்டு தோறும்கொண்டாடப்படுவது வழக்கம்.அந்த வகையில் தமிழகத்தில் நேற்று பக்ரீத் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக் கோட்டையில் உள்ள சாதுல்லாகான் மசூதியில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு முஸ்லீம்கள் நேற்று காலையில் சிறப்பு தொழுகை நடத்தினர். இதை முன்னிட்டு செஞ்சி பெரிய பள்ளிவாசலில் இருந்து முஸ்லீம்கள் ஊர்வலமாக செஞ்சி கூட்ரோட்டிற்கு வருகை தந்தனர்அங்கு செஞ்சி தாலுகா பள்ளிவாசல் ஜமாத்தலைவர் சையத் மஜித் பாபு பிறை கொடி ஏற்றி வைத்தார் தொடர்ந்து ஊர்வலமாக திருவண்ணா மலை சாலை வழியாக செஞ்சிக் கோட்டையில் உள்ள சாதுல்லாக்கான் மசூதியை அடைந்தனர். அங்கு காலை 9.00 மணிக்கு சிறப்பு தொழுகை நடந்தது. தொழுகையை ஷமீம் அக்தர் நடத்தினார்.

இதில் ரப்பானி வைத்தியசாலாடாக்டர் எஸ் .ஏ. சையத் சர்தார். பள்ளிவாசல் தலைவர்கள் திருவண்ணாமலை சாலை ஜப்பார் .பஸ் நிலையம் ஆதில் பாஷா, என்.ஆர்.பேட்டை அப்துல்லா, எம்.ஜி.ஆர். நகர் பாபு சாயபு.கவுன்சிலர் ஜான் பாஷா, மாவட்ட பிரதிநிதி சர்தார், முன்னாள் கவுன்சிலர்கள் சையத் பாபு. காஜா பாஷா, ரப்பானி அசு துல்லா.சையத் ஆதம். ஷிமார்ட் அஷ்ரப், கலீல், சமியுல்லா, ரிஸ்வான், முபாரக். ஷாஜகான். ஷாஜிஷரிப், சாதிக், குத்தூஸ் குரைஷி, உள்ளிட்ட ஏராளமான இஸ்லாமிய பெருமக்கள் சிறப்பு தொழுகையில் கலந்து கொண்டனர்

இதேபோல் செஞ்சி செட்டிபாளையம் கொத்த மங்களம் சாலையில் உள்ள ஈத்கா மைதானத்தில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு காலை 9.00 மணிக்கு சிறப்பு தொழுகை நடந்தது. இதில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,உள்ளிட்ட ஏராளமான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர். பள்ளிவாசல் தலைவர்கள் சந்தை மேடு கவுஸ் பாஷா, தேசூர்பாட்டை இப்ராஹிம் சிறுகடம்பூர் மதினா பள்ளிவாசல் தலைவர் சையத் அமீன், முன்னாள் நகர செயலாளர் காஜா நஜீர், உள்ளிட்ட ஏராளமான முஸ்லீம்கள் கலந்து கொண்டனர் இதே போல் அவலூர்ப்பேட்டை, எதப்பட்டு, வளத்தி ,கடலி, சொரத்தூர்,மீனம்பூர், அப்பம்பட்டு, அனந்தபுரம் ஆகிய பகுதிகளில் நடந்த பக்ரீத் பண்டிகை சிறப்பு தொழுகையில் ஏராளமான முஸ்லீம்கள் குழந்தைகள் கலந்து கொண்டு ஒருவருக்கு ஒருவர் கட்டித் தழுவி பக்ரீத் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

### முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரை!

# திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிவிப்பு!



திருப்பூர், மே 29-

திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் நாளை (30.05.2026 - சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயம்”, “தளபதி அரங்கில்” இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுசெயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு கருத்துரையாற்றுகிறார்.

அதுசமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை செம்மொழி நாளாக கொண்டாடுவது தொடர்பாக.

கழக ஆக்கப்பணிகள் தொடர்பாக.

இவ்வாறு இல.பத்மநாபன் செயலாளர் அறிவித்துள்ளார்.

### சேலம் மாநகராட்சிப் பகுதிகளில்

# த.வெ.க.வினர் ரீல்ஸ் எடுத்து மிரட்டுகிறார்கள்!

## மாமன்ற உறுப்பினர்கள் புகார்!

சேலம், மே 29 -

சேலம் மாநகராட்சி பகுதிகளில் த.வெ.க. வினர் ரீல்ஸ் எடுத்து மிரட்டுகிறார்கள் என மாமன்றஉறுப்பினர்கள் புகார் கூறுகின்றனர்.

சேலம் மாநகராட்சி மன்ற கூட்டம் மேயர் ஆ. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தெய்வலிங்கம் மாமன்ற உறுப்பினர் த.வெ.க.வினர் வார்டுக்குள் அத்துமீறி நுழைந்து ஆய்வு என்ற பெயரில் ரீல்ஸ் போட்டு அட்டகாசம் செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை தடுக்க மாநகராட்சி சார்பாக சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்.

தனியாருக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மாமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்கு பதில் அளித்த மேயர் ஆ ராமச்சந்திரன் உறுப்பினர்களின் வேண்டு கோளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

---

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பும் அறனுமாய் இருந்து
எங்களை விட்டுப்பிரிந்தாய்
உன் நினைவுகளே எங்களுக்கு
வழிகாட்டும் ஒளிவிளக்கு !



## திருமதி M.A. பரமேஸ்வரி M.A.,B.L.



என்றும் நீங்கா நினைவுகளுடன்

**ஆ.இராசா M.P**
துணைப்பொதுச்செயலாளர் தி.மு.க

**செல்வி.மயூரி இராசா** MSc., LLM (UK)

மற்றும்

**குடும்பத்தினர் & உறவினர்கள்**
வேலூர் கிராமம், பெரம்பலூர் மாவட்டம்